**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.125/2024 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சங்கர மூர்த்தி | த–பெ /க.பெ. | செல்வராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 46/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் புரோக்கர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2025**

-----------------------------------------------------------------------------------------------------

**31.07.2025**
**குறுக்கு விசாரணை**

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். எதிரிக்கும் எனக்கும் எப்படி பழக்கம் என்றால் மாரி முத்து என்பவர் மூலம் பழக்கம். எதிரி என்ன தேவைக்காக என்னிடம் கடன் பெற்றார் என்றால் குடும்ப தேவைக்காகவும், மருத்துவ செலவிற்கும் கேட்டார். நான் கடன் கொடுத்தாக சொல்லும் ரூ. 3 லட்சம் எப்படி கிடைத்தது என்றால் எனது சேமிப்பாகும். அது பற்றி விபரத்தை எனது முதல் விசாரணையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. மேற்படி கடனுறுதிசீட்டில் சில இடங்கள் நிரப்பப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி என்பதில் முதலாவது சாட்சி காயத்திரி சுரேஷ்குமார் என்றால் சரிதான். கடனுறுதி பத்திரத்தில் நோட்டரி அபிடவிட் செய்யும்போது எதிரி மற்றும் சாட்சிகளுடன் நானும் இருந்தேன் என்றால் சரிதான். கடனுறுதி பத்திரம் யாரால்**

தயார் செய்யப்பட்டது என்றால் எதிரி வாங்கி வந்தார். கடனுறுதி பத்திரத்தை எதிரிதான் வாங்கி வந்தார் என்ற விபரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) கடனுறுதி பத்திரம் என்றால் என்ன என்றால் கடனுறுதி சீட்டுடன் கூடுதல் ஒரு ஆதாரமாக ஒரு கடனுறுதி பத்திரம் வாங்கினேன். ரியல் எஸ்டேட் தவிர வேறு தொழில் செய்கிறேனா என்றால் General இன்சூரன்சில் ஏஜென்ட்டாக இருக்கிறேன். நான் LIC முகவராக உள்ளேன் என்றால் சரிதான். தற்போது இல்லை. பொதுவாக கடன் கொடுப்பவர்கள்தான் பத்திரம் வாங்கி அக்கடனிற்கான ஆவணத்தை எழுதுவார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி பத்திர விற்பனையாளரை விசாரித்தால் யார் பத்திரத்தை பெற்றார்கள் என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான். கடனுறுதி பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ள அனைவரும் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் என்று சொன்னால் மாரிமுத்து என்பவரை மட்டும் தெரியும் மற்றொருவர் எதிரி அழைத்து வந்த சாட்சி. கடனுறுதி சீட்டு எனது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. கடனுறுதிசீட்டு, பத்திரம், காசோலை ஆகிய மூன்றும் ஒரே நாளில் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சுரேஷ் குமார் என்பவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் என்றால் தெரியாது. கடனுறுதிசீட்டை யார் எதிரிக்கு படித்துக்காட்டினார் என்றால் எதிரியே படித்துப்பார்த்தார். காயத்திரி சுரேஷ்குமார் படித்துக்காண்பித்தார்கள். மேற்படி 3 ஆவணங்களை நான்தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் எதிரியே பூர்த்தி செய்தார். வழக்கு காசோலை தொகை எவ்வளவு என்றால் ரூ. 2 லட்சத்து 31 ஆயிரத்து 421 ஆகும்.

3) வங்கி காசோலையில் என் பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

காசோலை திருப்பப்பட்ட விபரத்தை எத்தனை நாட்களில் எதிரியிடம் சொன்னேன் என்றால் 10 நாட்களில் சொன்னேன். முதன் முறை போதிய தொகை இல்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்ட பின்னர் மீண்டும் அந்த காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தது சரியா என்றால் எதிரி சொன்னதன் பேரில் தாக்கல் செய்தேன். குறிப்பிட்ட தேதியில் வங்கி காசோலை திரும்பவும் வங்கியில் வசூலுக்கு வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்ற நோக்கத்திற்காக என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுக்கும்போது என்ன என்ன ஆவணங்கள் வேண்டும் என்று சொன்னேன் என்றால் கடனுறுதிசீட்டு வேண்டும் என்றும் கூடுதலாக ஒரு ஆவணம் வேண்டும் என்றும் கூறினேன். ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் கடன் கொடுத்தால் வருமானவரி கட்ட வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் இதுவரை வருமானவரி தாக்கல் செய்யவில்லை. காசோலை திருப்பப்பட்ட விபரத்தை எங்கு வைத்து சொன்னேன் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து சொன்னேன்.

4) நான் எதிரியை நேரில் சந்தித்தது இல்லை என்றாலும், நான் காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.31 06:47:38 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)